சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் சமத்துவப் பொங்கல் -

# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கல்!



## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

தமிழினத்தின் பெருமையை கொண்டாடும் திருநாள் தமிழர் திருநாள்! தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் இவைகளை பிரதிபலிக்கும் பொன்னாள் பொங்கல் திருநாள்! தைத் திங்கள் முதல்நாளே தமிழ் புத்தாண்டு என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த நாள்!

உழுத மண்ணினை, கால்நடைகளை வணங்கி நன்றி கூறும் உன்னத உழவர் பெருநாளே பொங்கல் திருநாள்! தமிழர்களின் வீரம், கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டு திருநாள்!

பொங்கல் விழாவைத் தமிழர் திருநாளாக அடையாளப்படுத்தியதில் திராவிட இயக்கத்திற்கு பெரும் பங்கு உண்டு. தந்தை பெரியாரும், பேரறிஞரும், முத்தமிழறிஞர் கலைஞரும் பொங்கல் திருநாளே தமிழர்கள் அனைவருக்குமான விழா என்பதை எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும், நிகழ்ச்சிகளாலும் மக்கள் மனதில் என்றும் நீங்காமல் நிலைபெறச் செய்தனர்.

பொங்கல் திருநாள் என்றாலே இனிப்புஇனிமை. அதிலும் நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "திராவிட மாடல் ஆட்சி" அமைந்த பிறகு மக்களின் இதயத்திலே இரட்டிப்பு இனிப்பும் - இனிமையும் கலந்த இந்த நன்நாளில் சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் மாநகர வட்டக் கழகங்கள், ஒன்றிய ஊராட்சி கிளைக் கழகங்கள், பேரூர் வார்டு கழகங்கள் தோறும் இருவண்ண தோரணங்கள் கட்டி, மஞ்சள் - கரும்பு வைத்து சமத்துவப் பொங்கலிட்டு, கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலில் கழக கொடியை ஏற்றிவைத்து, "இளம் தலைவர் துணை முதல்வர்" பிறந்தநாள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி எழுச்சிமயமாக கொண்டாடிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| **ஓமலூர் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி** | |
| **கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை: இரா.இராஜேந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர் , தூத்துக்குடி சரத்பாலா தலைமைக்கழக பேச்சாளர்** | |
| **நாள் : 14. 01. 2025 செவ்வாய்க்கிழமை** | |
| **ஒன்றியம் / பகுதி / பேரூர்** | **நேரம்** |
| **தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம்** | **காலை 09.00 முதல் மாலை 05.00 மணி வரை** |
| **நாள் : 15. 01. 2025 புதன்கிழமை** | |
| கன்னங்குறிச்சி பேரூர் | காலை 08.00 மணி |
| அஸ்தம்பட்டி பகுதி | காலை 08.30 முதல் 10.00 மணி வரை |
| குமாரசாமிபட்டி பகுதி | காலை 10.30 முதல் நண்பகல் 12.00 மணி வரை |
| செவ்வாய்பேட்டை பகுதி | நண்பகல் 12.30 முதல் பகல் 02.00 மணி வரை |
| அரிசிபாளையம் பகுதி | மாலை 04.30 முதல் 06.00 மணி வரை |
| பொன்னம்மாபேட்டை பகுதி | மாலை 06.30 முதல் இரவு 08.00 மணி வரை |
| **கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை: இரா.இராஜேந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர் , தூத்துக்குடி சரத்பாலா தலைமைக் கழக பேச்சாளர் , மு.கார்த்திகேயன் மாவட்ட கழக பொருளாளர் ,** | |
| **நாள் : 15. 01. 2025 புதன்கிழமை** | |
| ஓமலூர் தெற்கு ஒன்றியம் | காலை 09.00 முதல் மாலை 05.30 மணி வரை |
| **சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி** | |
| **கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை: பார் இளங்கோவன் ,** | |
| **நாள் : 11. 01. 2025 சனிக்கிழமை** | |
| கொண்டலாம்பட்டி பகுதி | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| குகை பகுதி | மாலை 04.00 மணி முதல் 05.30 மணி வரை |
| தாதகாப்பட்டி பகுதி | மாலை 06.00 மணி முதல் இவு 08.00 மணி வரை |
| **நாள் : 12. 01. 2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| கிச்சிப்பாளையம் பகுதி | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| அம்மாபேட்டை பகுதி | மாலை 04.00 மணி இவு 07.00 மணி வரை |
| **சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி** | |
| **கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை : பெத்தாம்பாளையம் சா.ராஜசேகரன்** | |
| **நாள் : 11. 01. 2025 சனிக்கிழமை** | |
| மெய்யனூர் பகுதி | காலை 10.00 முதல் பகல் 12.00 மணி வரை |
| சூரமங்கலம் பகுதி | மாலை 04.00 மணி 05.30 மணி வரை |
| அழகாபுரம் பகுதி | மாலை 06.00 மணி இவு 07.30 மணி வரை |
| **நாள் : 12. 01. 2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| சேலம் வடக்கு ஒன்றியம் | காலை 10.00 முதல் பகல் 12.00 மணி வரை |
| **ஓமலூர் சட்டமன்றத் தொகுதி** | |
| **கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை : .இ.ஜி.சுகவனம் ,** | |
| **நாள் : 11. 01. 2025 சனிக்கிழமை** | |
| காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் | பகல் 02.00 முதல் மாலை 04.00 மணி வரை |
| **நாள் : 12. 01. 2025 ஞாயிற்றுக்கிழமை** | |
| ஓமலூர் வடக்கு ஒன்றியம் | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| ஓமலூர் கிழக்கு ஒன்றியம் | பகல் 02.00 முதல் மாலை 04.00 மணி வரை |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர், நேற்று முன்தினம் (09.01.2025–வியாழக்கிழமை) கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று, கள்ளக்குறிச்சி முன்னாள் ஒன்றியக்குழு பெருந் தலைவரும், ஒன்றிய கழக செயலாளருமான வழக்கறிஞர் சி.வெங்கடாசலம் அவர்களின் மறைவையொட்டி, அவரது திருஉடலுக்கு, மாலை அணிவித்து அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

பழனிசாமியின் கபட நாடகம் மக்களிடம் எடுபடாது!

# பாலியல் குற்றவாளிகளின் சரணாலயம் அ.தி.மு.க. என்பது மீண்டும் அம்பலம்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கை!

*சென்னை, ஜன.11 -*

அ.தி.மு.க. பாலியல் குற்றவாளிகளின் சரணாலயம் என்பது அம்பலமாகி விட்டது . எனவே பழனிசாமியின் கபட நாடகம் இனி மக்களிடையே எடுபடாது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பெண்கள் பாதுகாப்பில் தமிழ்நாட்டு மக்களிடம் நற்பெயர் பெற்று வரும் திராவிட மாடல் அரசின் மீது எப்படியாவது களங்கம் சுமத்தவேண்டும் எனும் சிறு புத்தியோடு தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என அருவருக்கத்தக்க வதந்தியைப் தொடர்ந்து பரப்பி வந்தார் பச்சைப் பொய் பழனிசாமி.

அப்படித்தான் அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் எப்படியாவது திமுகவின் பெயரை சேர்த்துவிட வேண்டும் எனும் இழிவான நோக்கத்தோடு தொடர்ந்து யார் அந்த சார்? என வதந்தி அரசியலை நடத்தி வந்தார்.

அற்பத்தனமான புத்திக்கு இப்பொழுது விடை கிடைத்துவிட்டது, அண்ணா பல்கலைக்கழக வழக்கில் அல்ல, அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளுக்கு உதவிய அதிமுக 103 வது வட்டச்செயலாளர் சுதாகர் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மேலும் சிறுமியின் புகாரை வாங்காமல் இழுத்தடித்த காவல் ஆய்வாளர் ராஜி என்பவரையும் தமிழ்நாடு அரசின் சிறப்பு புலனாய்வு குழு கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது. தனது கட்சியை சேர்ந்தவரைக் காப்பாற்ற பழனிசாமி யார் இந்த சார்? என நடத்திய கபட நாடகம் இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிபிஐ விசாரணை வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசு உண்மையை மறைக்க சிபிஐ விசாரணையை மறுப்பது போலவும் பொதுவெளியில் பிதற்றி வந்தார் பழனிசாமி. இதோ உண்மை சந்திக்கு வந்து விட்டது. அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் மறைந்திருந்த அந்த சார் அதிமுக வட்டச் செயலாளர்தான்.

பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகள் தொடங்கி இராமேஸ்வரம் குளியலறை கேமரா வைத்த காமுகன், அண்ணாநகர் சிறுமி பாலியல் வழக்கு வரை பாலியல் குற்றாவாளி "சார்களின்" சரணாலயம் அதிமுக என்பது மீண்டுமொ ருமுறை அம்பலமாகியிருக்கிறது.



செப்டம்பர் மாதம் பதிவு செய்யப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உடனடியான உறுதியான நீதியைப் பெற்றுத்தரவே சிபிஐ விசாரணைக்கு தமிழ்நாடு அரசு தடை வாங்கியது. சிபிஐ விசாரணை ஏற்படுத்தும் தாமதத்திற்கு பொள்ளாச்சி வழக்கே சான்று.

'அண்ணா, அண்ணா விட்டுடுங்க அண்ணா' என்று பொள்ளாச்சி பெண்கள் கதறிய குரலில் தமிழ்நாடே அதிர்ந்து போனது அந்த வழக்கில் குற்றவாளிகளை தப்பிக்க வைக்க தனது கள்ளக்கூட்டாளி பாஜகவோடு சேர்ந்து அதிமுக செய்த காரியங்கள் தான் இன்றும் அந்தக் கொடுமைக்கான நீதியை பெற்றுத் தர தாமதத்தை ஏற்படுத்தி உண்மை குற்றவாளிகளை காப்பாற்றி வருகிறது.

இந்திய அளவில் பெண்கள் மீதான கொடூரமான பாலியல் வன்கொடுமைகளை நிகழ்த்துவதில் முன்னணியில் இருக்கும் தனது கள்ளக்கூட்டணி பாஜகவிற்கு கொஞ்சமும் சளைத்த கட்சி அல்ல அதிமுக என்பது மற்றுமொருமுறை அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் நிருபிக்கப்பட்டுள்ளது.

இனியும் யார் அந்த சார்? என்று பச்சைப் பொய் பழனிசாமி கேட்க விரும்பினால் கண்ணாடியைப் பார்த்துதான் கேட்க வேண்டும்.

இன்றைக்கு காவல் ஆய்வாளரையே கைது செய்திருப்பதன் மூலம் எத்தகையும் சார்பு மற்ற நேர்மையான விசாரணையை நடத்தி பாதிக்கப்பட்டோருக்கு விரைவான நீதியைப் பெற்று தரும் திராவிட மாடல் அரசின் வெளிப்படையான நிர்வாகத்திறன் மக்கள் மன்றத்தில் மீண்டுமொருமுறை உறுதியாகியுள்ளது.

அண்ணா நகர் வழக்கானாலும் சரி, அண்ணா பல்கலைக் கழக வழக்கானாலும் சரி பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையை நிகழ்த்திய எந்த "சாரும்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கடுமையான நடவடிக்கைக்கு தப்பிக்க முடியாது. ஆனால் அந்த சார்கள் பலரும் அதிமுகவினராக இருப்பதுதான் வெட்க கேடு.

பாலியல் குற்றவாளிகளின் புகலிடமாக அதிமுகவை மாற்றி அவர்களை பாதுகாத்து வரும் பழனிசாமி தனது கள்ளக்கூட்டாளி பாஜகவுடன் சேர்ந்து கொண்டு இனியும் யார் அந்த சார்? என மக்களிடம் நாடகமாடினால் "யோக்கியன் வரான் சொம்பைத் தூக்கி உள்ளே வை" என மக்கள் புறக்கணித்து செல்வார்கள்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் உடனடியாக குற்றவாளி ஞானசேகரன் கைது செய்யப்பட்டு விசாரணை தீவிரமாக நடைபெற்றுவந்தபோதும், தமிழ்நாடு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது போல திசைதிருப்பல் அரசியலில் ஏன் பழனிசாமி ஈடுபடுகிறார்? எனும் சந்தேகம் தமிழ்நாட்டு மக்களிடையே இருந்தது. அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் தனது கட்சிக்காரரை காப்பாற்ற அவர் நடத்திய கபடநாடகம்தான் அது என்பது இன்று மக்களிடம் அம்பலபட்டுவிட்டது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என பழனிசாமி நடத்தும் கபட நாடகம் இனி ஒரு நாளும் மக்களிடத்தில் எடுபடப்போவதில்லை.

பெண்கள் மீது எந்த வகையில் வன்முறை நிகழ்த்தப்பட்டாலும் அதை திராவிட மாடல் அரசு எந்த வகையிலும் அதை சகித்துக் கொள்ளாது, அப்படிபட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் வழிகாட்டியுள்ளார். முதலமைச்சரின் ஆட்சியில் பெண்களுக்கு குற்றமிழைத்த யாரும் சட்டத்தின் பிடியிலிருந்து ஒரு நாளும் தப்பிக்க முடியாது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பொங்கலை முன்னிட்டு ஜன.16 கோயம்பேடு சந்தைக்கு விடுமுறை!

வியாபாரிகள் சங்கம் அறிவிப்பு!


*சென்னை, ஜன 11 -*

பொங்கலை முன்னிட்டு ஜனவரி. 16இல் கோயம்பேடு சந்தைக்கு விடுமுறை அறிவித்து வியாபாரிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

பொங்கல் பண்டிகையையொட்டி கோயம்பேட்டில் சிறப்பு சந்தை தொடங்கியுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிறுவேடல் வெ.கணேசன்
### சனவரி 11 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவேடல் கிளைக் கழகச் செயலாளர் – வாலாஜாபாத் ஒன்றிய இணைச் செயலாளர் – ஒன்றிய துணைச் செயலாளர் – மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜாபாத் ஒன்றியக்குழு உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.


வாலாஜாபாத் நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 'சிறை சென்ற செம்மல்' என்று அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கூட்டம் !

மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!



மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் சீர்காழி ஆகிய சட்டமன்ற தொகுதியில் உள்ள ஒன்றிய நகர பேரூர் பகுதியில் உள்ள பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் கீழ்கண்டவாறு தொகுதி பார்வையாளர்கள் மன்னை த.சோழராஜன், வழக்கறிஞர் மு.தினேஷ் குமார் முன்னிலையில் நடைபெற உள்ளது கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| நாள்: 12.01.2025 | **பூம்புகார் தொகுதி** | | |
| காலை 9.00 மணி | செம்பனார்கோவில் வடக்கு | அறிஞர் அண்ணா மண்டபம், செம்பை. | 64 |
| | சீர்காழி கிழக்கு | | 21 |
| காலை 11.00 மணி | செம்பனார்கோவில் மத்தியம் | தனலெட்சுமி திருமண மண்டபம், திருக்கடையூர். | 47 |
| மாலை 3.00 மணி | செம்பனார்கோவில் தெற்கு | ரமாட்டி திருமண மண்டபம், இலுப்பூர் | 47 |
| | தரங்கம்பாடி பேரூர் | | 20 |
| மாலை 5.00 மணி | குத்தாலம் வடக்கு | ஸ்வீட் டிரிம்ஸ் திருமண மண்டபம், தேரிழந்தூர். | 33 |
| நாள்: 18.01.2025 | **சீர்காழி தொகுதி** | | |
| காலை 10.00 மணி | கொள்ளிடம் மேற்கு | அருண்பாலாஜி திருமண - மண்டபம், கொள்ளிடம் | 78 |

குறிப்பு:- பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் குறித்து அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) பூத் கமிட்டி கூட்டத்தில் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ள செய்திட வேண்டும்.

**நிவேதா. எம்.முருகன்** எம்.எல்.ஏ.,
செயலாளர்.
மயிலாடுதுறை மாவட்டம், தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரூர் கே.ஆர்.சுப்பிரமணி
### சனவரி 11 (2020)



1968ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்திலேயே, இந்தித் திணிப்பை எதிர்த்து மொரப்பூர் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் அரூர் நகரில் 'இளைஞர் தி.மு.க.' அமைப்பை தொடங்கி மாவட்டம் முழுவதும் கழகக் கொள்கை பரப்ப துவங்கிய இவர், அரூர் ஒன்றிய துணை துணைச் செயலாளர், பேரூர்ச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணி மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கறுப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் அரசாணை எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், கலைஞர் கைது எதிர்ப்பு மற்றும் ராணிமேரி கல்லூரி பிரச்சினையில் கழகத் தலைவர் கைது எதிர்ப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**